பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
01 08 2024 THURSDAY 7.15 PM
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வியட்நாம் உடனான வர்த்தகம் 85 சதவீதம் அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- நாடு முழுவதும் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு மனோகர் லால் கட்டார் தெரிவித்துள்ளார்.

- பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின்கீழ் தமிழகத்தில் ஐந்து லட்சத்து 70 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள வயநாட்டில் சூரல்மலா, முண்டக்கை இடையே இரும்புப்பாலம் அமைக்கும் பணிகளை ராணுவம் நிறைவு செய்துள்ளது.

- பாரிஸ் ஒலிம்பிக் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<<<>>>>>>

வியட்நாம் உடனான வர்த்தகம் 85 சதவீதம் அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசு முறைப்பயணமாக புதுதில்லி வந்துள்ள வியட்நாம் பிரதமர் திரு Pham Minh Chinh –வுடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

நாளந்தா பல்கலைக்கழகத்தை வியட்நாம் இளையோர் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இருநாடுகளுக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான அனைத்து அம்சங்களும் இந்த பேச்சுக்களில் இடம்பெற்றதாக பிரதமர் கூறினார்.

பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான புதிய வாய்ப்புகள் கண்டறியப்பட உள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்த பேச்சுக்களுக்கு பின்னர், இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

<<<<<<<>>>>>>

குடியரசு துணைத்தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான திரு ஜெக்தீப் தன்கரை, ஜப்பான் நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையின் தலைவர் திரு Nukaga Fukushiro தலைமையிலான குழுவினர் இன்று சந்தித்து பேசினர்.

அப்போது இந்தியா - ஜப்பான் இடையே உலகளாவிய பங்களிப்பை மேலும் வலுப்படுத்துவதற்கும், வர்த்தகம், முதலீடு உள்ளிட்டவற்றை மேலும் அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஜப்பான் நாடாளுமன்ற குழுவினர், மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லாவையும் சந்தித்தனர்.

இந்தியாவில் நடந்து முடிந்த தேர்தலில் 65 கோடி மக்கள் வாக்களித்து சாதனை படைத்ததாக திரு ஓம். பிர்லா அவர்களிடம் எடுத்துக்கூறினார்.

ஜப்பான் குழுவினர் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கரையும் சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினர்.

இந்தியா - ஜப்பான் இடையே வர்த்தகம், முதலீடு, கல்வி மற்றும் தொழில்நுட்பத்துறைகளில் நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக ஆலோசனை நடத்தியதாக திரு ஜெய்சங்கர் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு மனோகர் லால் கட்டார் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் தமது துறை தொடர்பான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக கூறினார்.

அண்மை காலமாக தில்லியில் பெய்துவரும் மழையால் மக்கள் அவதிப்படுவதை தடுக்க தில்லி அரசு கழிவுநீர் மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ளவில்லை என்று குறை கூறினார்.

இந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தில்லி அரசு முன்வர வேண்டும் என்றும் திரு மனோகர் லால் கட்டார் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>

உலக அளவில் பயண மற்றும் சுற்றுலா மேம்பாட்டு குறியீட்டில் இந்தியா 39-ஆவது இடத்தை பிடித்திருப்பதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனை குறிப்பிட்ட அவர், உலக பொருளாதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், 119 நாடுகளில் இந்தியா இந்த இடத்தை பிடித்திருப்பதாக கூறினார்.

கடந்த 2022-ஆம் ஆண்டில் உலகம் முழுவதிலும் இருந்து 97 கோடி சுற்றுலா பயணிகள் வருகை தந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச சுற்றுலா சந்தையில் இது ஒன்று புள்ளி நான்கு ஏழு சதவீதமாகும் என்றும், ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் சர்வதேச சுற்றுலா பயணிகளின் வருகை 15 புள்ளி ஆறு ஆறு சதவீதமாக அதிகரித்திருப்பதாகவும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

<<<<<<<>>>>>>

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம் சார்பில் நாடு முழுவதும் 165 பெரிய மருத்துவமனைகளும், ஆயிரத்து 695 கிளை மருத்துவமனைகளும் உள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், இந்த மருத்துவமனைகளில் 2 ஆயிரத்து 675 நிரந்தர மருத்துவர்களும், ஒன்பதாயிரத்து 442 செவிலியர்கள் உள்ளிட்ட துணை மருத்துவ பணியாளர்களும் பணியாற்றி வருவதாக கூறினார்.

<<<<<<<>>>>>>

நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட வயநாடு அருகே முண்டக்கை கிராமத்தில் சிக்கித்தவித்த அனைவரும் மீட்கப்பட்டிருப்பதாக கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

வயநாட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஏராளமானோர் மாயமாகி இருப்பதால், அவர்களை தொடர்ந்து தேடும் பணிகள் நடைபெறுவதாக கூறினார்.

தேசிய பேரிடர் மீட்புப்படையினர், ராணுவத்தினர் உள்ளிட்டோர் மேற்கொண்ட மீட்பு நடவடிக்கைகளை அவர் பாராட்டினார்.

முன்னதாக, பாதிப்புக்குள்ளான பகுதிகளை ஹெலிகாப்டரில் பார்வையிட்ட பின்னர், அனைத்துக்கட்சி தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இதற்கிடையே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட சூரல்மலா பகுதியில் நடைபெற்றுவரும் மீட்புப்பணிகளை பார்வையிட்டார்.

இதனிடையே, நிலச்சரிவால் சூரல்மலா - முண்டக்கை இடையே இருந்த பாலம் அடித்து செல்லப்பட்ட நிலையில் ராணுவத்தினர் புதிதாக இரும்புப்பாலம் அமைத்துள்ளனர்.

தற்போது அந்த பாலத்தின் வழியாக நிவாரணப் பொருட்களுடன் வாகனங்கள் செல்லத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில், தமிழகத்தில் இருந்து அனுப்பிவைக்கப்பட்ட மீட்புக்குழுவினர் மேபாடி, சூரல்மலா பகுதிகளில் தொடர்ந்து மீட்புப்பணியில் ஈடுபட்டிருப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதனிடையே, நிலச்சரிவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 280-ஐ தாண்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின்கீழ் தமிழகத்தில் ஐந்து லட்சத்து 70 ஆயிரத்து 294 வீடுகள் கட்டப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் இதனை தெரிவித்த மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை இணையமைச்சர் திரு டோகான் சாஹு, தமிழகத்தில் ஆறு லட்சத்து 80 ஆயிரத்து 347 வீடுகள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதில் ஆறு லட்சத்து 63 ஆயிரத்து 430 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதாக கூறினார்.

மத்திய அரசின் சார்பில் இத்திட்டத்திற்காக 11 லட்சத்து 185 ஆயிரத்து 30 கோடி நிதி ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பதாகவும் திரு டோகான் சாஹு தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் பல்வேறு உயர்நீதிமன்றங்களில் 359 நீதிபதிகள் பணியிடம் காலியாக உள்ளது என்று மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில்  இதனை தெரிவித்த அவர், மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்களில் மட்டும் 5 ஆயிரத்து 238 பணியிடங்கள் காலியாக உள்ளதாகவும், விரைந்து அவற்றை நிரப்ப அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும் கூறினார்.

மாவட்ட நீதிபதி பணியிடங்களை நிரப்ப வேண்டியது அந்தந்த மாநில அரசுகள் மற்றும் உயர்நீதிமன்றங்களின் பொறுப்பு என்றும் திரு அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தடகள வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் உதவிப்பணியாளர்களுக்கு சிறப்பு மருத்துவ காப்பீட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், தனிநபருக்கு ஐந்து லட்சம் ரூபாய் வரை சுகாதார காப்பீடும், விபத்து உயிரிழப்பு மற்றும் பலத்த காயம் ஏற்பட்டால் கூடுதலாக 25 லட்சம் ரூபாய் வரை காப்பீடு கிடைக்கும் வகையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

விளையாட்டு வீரர்களுக்கான பத்து லட்சம் ரூபாய் உதவித்தொகை, முன்னாள் வீரர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் நேற்று பெய்த கனமழையால் தண்ணீர் தேங்கியது தொடர்பாக மக்களவை செயலகம் விளக்கம் அளித்துள்ளது.

கண்ணாடியிலான அலங்காரப் பொருட்களை இணைப்பதற்கு பயன்படுத்திய ரசாயனப்பொருள் காரணமாக தண்ணீர் கசிவு ஏற்பட்டதாகவும், உடனடியாக அதனை கண்டறிந்து சரிசெய்யப்பட்டதாகவும் மக்களவைச் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இதுபோன்ற பாதிப்புகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் கனமழை மற்றும் நிலச்சரிவு சம்பவங்கள் நேரிட்டுள்ளன.

இமாச்சலப்பிரதேசத்தின் ‘Kullu, Mandi, சிம்லா மாவட்டங்களில் நேற்றிரவு மேக வெடிப்பு காரணமாக பெய்த கனமழையால் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். 55 பேரை காணவில்லை.

சிம்லா மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் கனமழையால் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

பாதிப்புக்குள்ளான பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினரும், ராணுவத்தினரும் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இமாச்சலப்பிரதேச நிலைமையை தாம் உன்னிப்பாக கண்காணித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அம்மாநில முதலமைச்சர் திரு சுக்வீந்தர் சிங் சுக்கு-வுடன், உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமை குறித்து கேட்டறிந்தார்.

இதனிடையே, பீகாரில் மின்னல் தாக்கியதில் கடந்த 24 மணிநேரத்தில் 10 பேர் உயிரிழந்திருப்பதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

கயா மாவட்டத்தில் அதிகபட்சமாக ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

வடகிழக்கு மற்றும் தெற்கு மாநிலங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-12, 21-6 என்ற செட் கணக்கில் இந்தியாவின் பிரணாயை வென்றார்.

ஹாக்கிப்போட்டியில் பெல்ஜியம் 2-1 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

இந்தியா ஏற்கனவே காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

------------------

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் Swapnil Kusale வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 50 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்பிரிவில் பதக்கம் வெல்லும் முதல் இந்தியர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

இப்போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற Swapnil Kusale-க்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

-------

மகளிர் 20 கிலோமீட்டர் நடை போட்டியில் இந்தியாவின் பிரியங்கா கோஸ்வாமி 41-ஆவது இடத்தை பிடித்தார்.

<<<<<<<END>>>>>>